18 ஆகஸ்ட் 2024
பொதுக்காலம் ஆண்டின் 20 ஆம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH
newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள் **பணியாளர் தலைமைத்துவம்**

# தலைமைத்துவத்தில் கடவுளின் வார்த்தையைப் பின்பற்றுதல்

மலேசிய திருஅவையாக நமது பயணத்தைப் பற்றி சிந்திக்கும்போது, நாம் சரியான பாதையில் தான் செல்கின்றோமா என்று நாம் எண்ணக்கூடும். அவ்வாறு இல்லை என்று நினைக்கப் பல காரணங்கள் உண்டு. சமூக-பொருளாதாரம் மற்றும் அரசியல் சவால்கள், எதிர்மறையான இனம் மற்று சமய உணர்வுகள். ஊடகங்களில் பலவிதமான விவாதங்கள். கோவிட் -19 தொற்று முடிவுக்கு வந்ததில் இருந்து திருப்பலியில் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துள்ளது. இதுபோன்ற அறிகுறிகள், நம்முடைய செயல்நடவடிக்கைகள், மதிப்பீடுகள், மற்றும் தலைமைத்துவத்தை கேள்விக்குள்ளாக்கிவிடும்.



Image: https://www.freepik.com/author/stories/?uuid=cf9690bf-89b6-49a4-97bb-e128d10dd306

இந்த எதிர்மறையான சூழலில் கடவுளுடைய வார்த்தையில் சரணடைவதன் மூலம் இதுபோன்ற குழப்பத்திலிருந்து வெளியேற இன்றைய வாசகங்கள் நம்மை அழைக்கிறது. "ஞானம் நம்மை அழைக்கிறது: நான் தரும் உணவை உண்ணுங்கள்; நான் கலந்து வைத்துள்ள திராட்சை இரசத்தைப் பருகுங்கள் ; பேதமையை விட்டுவிடுங்கள்; அப்பொழுது வாழ்வீர்கள்; உணர்வை அடையும் வழியில் செல்லுங்கள்" நம் ஆண்டவர் நம்மை அழைக்கின்றார். கொடூரமான உலகில் குளிர்ந்துபோகும் நமக்கு வெப்பமூட்டவும், வலுவூட்டவும் அவரின் உடலையும், இரத்தத்தையும் உண்மையான உணவாக நமக்கு வழங்குகின்றார். நாம் அளவிடமுடியாத அளவுக்கு அவர் நம்மை அன்பு செய்கின்றார்; நம் உள்ளத்தின் விருப்பங்களையும் தேவைகளையும் வழங்குகின்றார். அவருடைய வார்த்தைகளை எவ்வளவுக்கு எவ்வளவு ஏற்றுக்கொள்கின்றோமோ, அவரின் வழிகளில் நம்பிக்கைக் கொள்கின்றோமோ, நம் முன்பாக அவர் நமக்கு புதியதொரு உலகத்தை நமக்கெனத் திறக்கின்றார்.

ஏற்றுக்கொள்ளும் மனதோடு அவருக்கு மறுமொழி கொடுத்தவர்கள், கடவுளின் நற்குணத்தை சுவைத்து, அவரைக் கண்டுணர்ந்தவர்கள்; இப்போது அவரால் அன்பு செய்யப்பட்டு, நம் ஆண்டவரைப் போல அன்பு செய்யவும் பணிசெய்யவும் அழைக்கப்பட்டுள்ளோம். பணியாளர் தலைமைத்துவம் என்பது நம்மையே தாழ்த்தி பிறருக்கு பணிசெய்யும் அடிமைகளைப் போல இருப்பது மட்டுமல்ல; மாறாக, இயேசுவின் தலைமைத்துவத்தை முதலில் அனுபவித்து, நற்குணங்களைக் கண்டு, பிறரையும் அவரின் அன்பிலும், நிறைவாழ்வுக்கும் அழைத்துசெல்வதாகும்.

கிறிஸ்துவர்களாக இவ்வுலகில் வாழ்வது அவ்வளவு எளிதல்ல, தற்கால சமுதாயத்தின் நீரோட்டத்திற்கு எதிராகவும் நமது சொந்த பலவீனமான இயல்புக்கு எதிராகவும் போராடிக்கொண்டிருக்கிறோம். எனினும் நம் இறைவன் நாம் செய்யும் முயற்சிகளை மறந்துவிடவில்லை. உலகின் வழிகளை விட்டுத் திரும்பி, அவரின் வழிகளைப் பின்தொடரவும் அவருடைய உடல் மற்றும் இரத்தத்திலிருந்து நம்முடைய வாழ்க்கையின் ஆதாரத்தைப் பெற்றுக்கொள்ளவும் அவர் நம்மை அழைக்கிறார். " எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர். நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்"

நம்மிடம் இருக்கவேண்டியது ஒன்றுதான். அவருடைய வார்த்தைகளில் நம்பிக்கைக் கொள்வது

**என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு! என் பாதைக்கு ஒளியும் அதுவே!**

திருப்பாடல்: 119:105




**இன்றைய இறைவார்த்தை:**

நீதிமொழிகள்: 9:1-6

திபா: 34: 2-3, 10-15

எபே: 5: 15-20

யோவான் 6: 51-58

INTERNAL CIRCULATION ONLY
BUL 33/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org